**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE,**

**TIRUVANNAMALAI.**

**O.S. No. 213/2023 PW1**

12.11.2025 **வா.சா.1 ராமன் சத்திய வாக்குமூலத்தின் பேரில் 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

1ம் பிரதிவாதி எனக்கு எவ்வாறு அறிமுகம் ஆனார் என்று கேட்டால் எனது தொழில் நிமித்தம் 1 பிரதிவாதி, ரோஷன், பிரகாஷ் ஆகியோருடன் என்னை வந்து பார்த்தார். அதன் மூலம் எனக்கு அவர் அறிமுகம் ஆனார். குளிர்சாதன கிடங்கு வைத்து நான் தொழில் செய்து வந்து கொண்டிருந்தேன். நான் எதற்காக 1ம் பிரதிவாதியிடம் இருந்து அடமானம் செய்து பணம் பெற்றேன் என்றால் எனது தொழில் நிமித்தமாக பெற்றேன். எனக்கு அவர் பணம் கொடுக்கும் போது என்ன தொழில் செய்து வந்தார் என்றால் சிவில் சப்ளை துறைக்கு பொருட்களை சப்ளை செய்யும் தொழிலை செய்து வந்தார். 1ம் பிரதிவாதியிடம் இருந்து வங்கி மூலமாக மேற்படி அடமானத்திற்கான தொகையை நான் பெற்றேன். என்னுடைய ஆக்ஸிஸ் வங்கிக்கு அவருடைய வங்கியில் இருந்து பணம் அனுப்பினார். அவருடைய வங்கி எந்த வங்கி என்று தற்போது நியாபகம் இல்லை. ரோஷன் ஆனந்த் என்பவர் எனக்கு என்ன உறவு என்று கேட்டால் எங்களது சமூகத்தை சேர்ந்தவர். கோபால் கிருஷ்ணனா என்ற கோல்டு ஸ்டோரேஜ் என்ற நிறுவனம் நான் நடத்திய நிறுவனம் என்றால் சரிதான். மேற்படி நான் நடத்தும் நிறுவனத்தில் டாக்டர் ருக்மாங்கதன் என்பவர் நடத்துகின்ற 3RULP என்ற நிறுவனம் பார்ட்னர் ஆகும். மேற்படி 3RULP என்ற நிறுவனத்தில் ரோஷன் ஆனந்த் பார்டனாராக இருந்தாரா என்றால் இல்லை. எனக்கு சுகம் என்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்தோடு வங்கி பரிவர்த்தனை இருந்ததா என்றால் இருந்தது. சுகம் என்டர்பிரைசஸ் நிறுவனத்தில் இருந்து நான் எந்த கடனும் வாங்கவில்லை. எனக்கு இந்த வழக்கு சொத்தை தவிர வேறு சொத்து உள்ளதா என்றால் உள்ளது. இந்த வழக்கு சொத்தில் மதிப்பு நான் விலைக்கு வாங்கும் போது ரூ. 1 கோடி ஆகும். நான் தவறாக சொல்கிறேன் என்றும் நான் வாங்கும் போதே வழக்கு சொத்தின் மதிப்பு ரூ. 10 கோடி என்றால் சரியல்ல. ரூ. 1 கோடி மதிப்புள்ள சொத்தை ரூ. 30 லட்சத்திற்கு அடமானம் வைக்க வேண்டிய அவசியம் என்ன என்று கேட்டால் எனது தேவைக்கு கடனாக பெற்றேன். 12.09.2023ந் தேதி 1ம் பிரதிவாதிக்கு நான் சட்ட அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அவ்வாறு சட்ட அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பாக 1ம் பிரதிவாதியை நான் தொடர்பு கொண்டேனா என்றால் ஆம். தொடர்பு கொண்டேன். 1ம் பிரதிவாதி, சுகம்

என்டர்பிரைசஸ் மற்றும் நான் நடத்தும் நிறுவனத்தின் மீது புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் எனது நிறுவனத்தின் மீது அவ்வாறு புகார் ஏதும் கொடுக்கவில்லை. சுகம் என்டர்பிரைசஸ் மீது புகார் கொடுத்துள்ளாரா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. 1ம் பிரதிவாதி எனது நிறுவனத்தின் மீதும் என் மீதும் கொடுத்துள்ள புகாரின் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கில் இருந்து தப்பிக்கும் பொருட்டு நான் முன்னெச்சரிகையாக இந்த வழக்கை 1ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனக்கு எந்த ஒரு அடமானக் கடனும் கொடுக்கவில்லை என்றும், ரோஷன் ஆனந்தின் அறிவுறுத்துதலின் பேரில் தான் எனது தொழிலுக்காக 1ம் பிரதிவாதி பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி 1ம் பிரதிவாதியிடம் இருந்து நான் பெற்ற அடமானக் கடனான ரூ. 30 லட்சத்திற்கு மாதாமாதம் நான் வட்டியை செலுத்தினேனா என்று கேட்டால் வட்டி கொடுக்க வேண்டும் என்று எழுதிக்கொள்ளவும் இல்லை, பேசவும் இல்லை. 1ம் பிரதிவாதியை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தை ஆங்கிலத்தில் தான் தாக்கல் செய்துள்ளேன். நான் எனது நிருபண வாக்குமூலத்தில் உண்மையை மறைத்து 1ம் பிரதிவாதியை ஏமாற்றும் நோக்கில் தவறான சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றும், அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.